DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 89/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5- பெரியண்ணன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 18.06.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு, காட்டு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து தோட்டத்துக்காரர்கள். அ.சா.1 ஐ எனக்கு தெரியும், அவரும் எனது பக்கத்து தோட்டத்துக்காரர். மாதம், நினைவில்லை, கடந்த ஆண்டு 10 தேதியன்று, ஒரு நாள் காலை சுமார் 09.00 முதல் 9:30 மணியளவில், நான் வசந்தாவின் தோட்டத்து வழியாக சென்று கொண்டிருந்தபோது, வசந்தாவின் தோட்டத்தில் உள்ள கரும்பை எதிரி முருகன் அவரது ஆட்களை வைத்து வெட்டிக் கொண்டிருந்தார். அதனைப் பார்த்த நான் வசந்தாவிற்கு தகவல் தெரிவித்தேன். வசந்தாவும் உடனடியாக அங்கு வந்தார். அப்போது அ.சா.1 வசந்தாவை பார்த்த முருகன் தகாத வார்த்தைகளால் திட்டி, காலால் எட்டு உதைத்தார். அப்போது அங்கு வந்த முருகனின் மகன் அஜித் வசந்தாவை அறைந்து கீழே தள்ளினார். எதிரி நாகம்மாள், வசந்தாவை காலால் எட்டி உதைத்து அவர் அணிந்திருந்த ஜாக்கெட்டை பிடித்து கிழித்தார். மேற்படி சம்பவங்களை நான் நேரில் பார்த்தேன். பின்னர் அங்கு வந்த வசந்தாவின் கணவர் வசந்தாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள் .

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.18 06:18:17 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani